இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 68 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 30 – செவ்வாய்க்கிழமை 17 அக்டோபர் 2023 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 68: Thiruvalluvar Year - 2054 - Purattasi 30 - Tuesday 17 October 2023 - Trichy ★★ 8 Pages ₹5.00

## டாக்டர் அப்துல் கலாம் நம்பி எதிர்பார்த்தபடி

# இந்தியா அறிவியல் பார்வையுடன் சிறந்து விளங்கும்!

## சிலையைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் புகழாரம்!

**சென்னை, அக். 17 –**

**“இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் நம்பி எதிர் பார்த்தபடி இந்தியா அறிவியல் பார் வையுடன் சிறந்து விளங்கும்” என்று அவரது சிலையைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் புகழாரம் சூட்டினார்.**

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர் கள், முன்னாள் குடியரசுத் தலை வர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறை யின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளா கத்தில் புதிதாக நிறு வப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலை யைத் திறந்து வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து அச்சிலையின் முன்பு புகைப்படம் எடுத்துக் கொண்ட காட்சி. இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வு பற்றிய விவரம் வரு மாறு:

தமிழகத்தின் புகழ்சால் பெருந்த கையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள், இசைமேதை கள், தமிழ்நாட்டின் தியாக வரலாற் றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவு களைப் போற்றிப் பெருமைப்படுத் தும் வகையிலும், தமிழ்ச் சமுதா யத்திற்கு அவர்களின் பங்களிப் பைப் பெருமைப்படுத்தும் வகையிலும்,செய்தி மக்கள் தொடர் புத் துறையின் சார்பில் நினைவ கங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண் கள், நினைவுச் சின்னங்கள் ஆகி யவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாது காக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக் கையில், “இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானியா கவும், இளை ஞர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பெரும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளா கத்தில் திருவுருவச் சிலை அமைக் கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15ஆம் நாள், இராமநாதபு ரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஜைனுலாப்தீன் மற்றும் திருமதி. ஆஷியம்மா ஆகியோருக்கு மக னாக டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பிறந்தார்.

டாக்டர் அப்துல் கலாம் அவர் கள், இராமேஸ்வரத்தில் பள்ளிப் படிப்பை முடித்து, திருச்சிராப்பள்ளி யிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரி யில் இயற்பியல் பட்டப்படிப்பு பயின் றார். 1955 ஆம் ஆண்டு தன்னு டைய விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டியில் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

ஒன்றிய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வானூர்தி அபிவி ருத்தி பிரிவில் விஞ்ஞானியாக தன் னுடைய ஆராய்ச்சி வாழ்க்கை யைத் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப்பணிக ளைத் தொடர்ந்து, துணைக் கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற் கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங் காற்றினார்.

மேலும், SLV III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகிணி I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## நரம்பியல் துறை வல்லுநராக – இந்தியாவின் முகமாகவே

# உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர்!

## மருத்துவர் பி.இராமமூர்த்தி நூற்றாண்டு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, அக்.17–**

**“இந்தியாவின் முகமாகவே உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்புக்குரிய வர் மருத்துவர் பி.இராமமூர்த்தி அவர் கள்” என்று அவரது நூற்றாண்டு விழா வையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் உரையாற்றும் போது புகழாரம் சூட்டினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் நேற்று முன்தினம் (15.10.2023) காணொலிக் காட்சி வாயிலாக நரம் பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத் துவர் பி. ராமமூர்த்தி அவர்களின் நூற் றாண்டு விழாவையொட்டி வெளியிட் டுள்ள வாழ்த்துரை வருமாறு:**

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபு ணர் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய மருத்துவர் பி. ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவதை யும், அதற்காக மிகச் சிறப்பான நினைவுத் தொகுப்பு வெளியிடப்படு வதும் மகிழ்ச்சிக்குரியது.

இந்த நிகழ்ச்சிக்காக அவரது குடும் பத்தின் சார்பில் என்னிடம் அழைப்பி தழ் தந்தார்கள். ராமமூர்த்தி அவர்கள் எங்கள் குடும்ப மருத்துவர் என்பதை தாண்டி எங்கள் குடும்ப நண்பர் என்று தான் முதலில் சொல்ல வேண்டும்.


மருத்துவர் ராமமூர்த்தி அவர்களுக் கும் எங்கள் குடும்பத்திற்கும் நீண்ட கால நட்பு உண்டு. தலைவர் கலைஞர் அவர்களும், மருத்துவர் ராமமூர்த்தி அவர்களும் பேசிக் கொண்டிருப்பதை கேட்டால், இளமைக் கால நண்பர்கள் பேசிக் கொள்வதைப் போல இருக்கும்.

**மிசா காலத்தில் மருத்துவமனைக்கு என்னை பார்க்க வந்தவர்!**

தலைவர் கலைஞரின் இலக்கிய ஆளுமை, எழுத்துநடை, ஆட்சி நிர்வா கத் திறன் மீது டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் பெருமதிப்பு கொண்டிருந் தார். கலைஞர் மீது மட்டுமல்ல, என் மீதும் மருத்துவர் அவர்கள் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

நெருக்கடி நிலைக் காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் நான் சிறையில் அடைக் கப்பட்டிருந்தபோது, உடல்நலம் பாதிக் கப்பட்டு சென்னை பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருந் தேன். என்னைப் பார்ப்பதற்காக அனு மதி பெற்று வந்தவர் தான் மருத்துவர் ராமமூர்த்தி அவர்கள். எனது உடல் நிலையைக் கவனித்துக் கொண்டவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள்.

மருத்துவ உலகத்தை கடந்து, அவ ருக்கு சமூக ஆர்வமும், நாட்டு மக்கள்



மீதான அக்கறையும் அதிகமாக இருந் தது.

**இருசக்கர வாகனப் பயணத்தில் தலைக் கவசம் அணிய வலியுறுத்தியவர்!**

இருசக்கர வாகனங்களில் அதிவேக பயணத்தின் காரணமாக பெரும் விபத் தையும், உயிரிழப்பையும் சந்தித்து வரு வதை அறிந்து, தலைக்கவசத்தை கட் டாயமாக்க வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வீட்டிற்கே வந்து வாதாடினார். எதையும் கட்டாயமாக்கினால் கெட்ட பெயர் வந்து விடும், உள்நோக்கம் கற்பிப் பார்கள் என்று முதலமைச்சர் கலைஞர் அதன் இன்னொரு பக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். மனித உயிரைக் காப் பதைவிட விமர்சனங்கள் பெரிதல்ல என்று வலியுறுத்தியவர் டாக்டர் ராம மூர்த்தி அவர்கள். அந்த இடத்தில் மருத் துவர் என்பதைக் கடந்து மனிதாபிமான காவலராக அவர் காட்சியளித்தார்.

**மிகப் புகழ்வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவர்!**

மிகப் புகழ்வாய்ந்த, நாட்டுப்பற்று மிகுந்த குடும்பத்தில் பிறந்த ராம மூர்த்தி அவர்கள், தனக்கெனத் தனிப் பாதையைத் தேர்ந்தெடுத்ததோடு, அதில் தனிச்சிறப்பான இடத்தை தனக் கென உருவாக்கிக் கொண்டவர். உயிர் காக்கும் துறையான மருத்துவத்துறை யில், நரம்பியல் துறை வல்லுநராக இந்தியாவின் முகமாகவே உலகம் முழு தும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள். இந்திய நரம்பியல் அறுவை சிகிச்சை இயலின் தந்தை என்றே போற்றப்பட்டவர்.

**குடியரசுத் தலைவர் – பிரதமர்களால் மதிக்கப்பட்டவர்!**

டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் உல கம் முழுதும் சென்று உரை நிகழ்த்தி யுள்ளார், உலகெங்கிலும் இருந்து வல் லுநர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து கருத்தரங்குகளை நடத்தியுள் ளார். நரம்பியல் துறையிலும், தலைப் பகுதியில் ஏற்படும் காயங்களுக்கான சிகிச்சைப் பிரிவிலும் பல முன்னெடுப்புகளை நிகழ்த்தி யுள்ளார். புதிய பிரிவுகளை நிறுவியுள்ளார். புகழ்பெற்ற சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வராகவும் பொறுப்பு வகித்துள்ளார். இந்திய குடி யரசுத் தலைவர்களாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி ஆகியோ ராலும், இந்தியப் பிரதமர்களான ஜவ ஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகி யோராலும் மதிக்கப்பட்ட ஆளுமையாக இருந்துள்ளார்.

மருத்துவத்துறை முன்னோடியா கவும், மனிதநேயப் பண்பாளராகவும் திகழ்ந்த டாக்டர் ராமமூர்த்தி அவர்க ளின் நூற்றாண்டில் அவரது வாழ்வும் பணியும் சிறப்பான முறையில் நினைவு கூரப்பட எனது நெஞ்சார்ந்த வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரைப் போன்ற மனிதாபிமான மருத் துவ சமுதாயம் உருவாக உறுதியேற் போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.